2010 ஏப்ரல் 15] [திரு. டி. சுதர்சனம்]

எந்தவிதமான உரிமையும் இல்லை. என்னுடைய உரிமையை நான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். என்னுடைய உரிமையைக் கொடுப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. அதனாலே, நான் பேச வந்தது, 17 மாதங்களுக்கு முன்னர் 3 பேர் கொலை செய்யப்பட்டு அந்தக் கொலைச் சம்பவத்தை தீவிரமாக ஆராய்ந்து—ரூ.2,000 கோடி சொத்து சம்பந்தமான நிகழ்வு அது. அந்த நிகழ்வை 17 மாத காலத்திற்குள்ளாக தீவிரமாகப் புலனாய்வு செய்து இன்றைக்கு அந்தக் குற்றவாளிகளைக் காவல் துறை கண்டுபிடித்து இருக்கிறது. அந்தக் காவல் துறையை இந்தச் சட்டமன்றம் பாராட்டுகிறது, காங்கிரஸ் கட்சியும் பாராட்டுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அஷோக் நகரில் நான் தங்கியிருக்கிற எனது வீட்டிற்கு அருகில்தான் அந்தக் கொலை நடந்தது. நான்தான் சட்டமன்றத்திலே அதை வலியுறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து கைது செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தேன். காவல் துறை, சிறப்பான நடவடிக்கை எடுத்து 17 மாதங்கள் கழித்து குற்றவாளிகளைக் கைது செய்திருக்கிறார்கள். குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான நடவடிக்கையையும் அரசு மேற்கொண்டதற்காக என்னுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) பாட்டாளி மக்கள் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் திரு. வாசுதேவன்மீது தாக்குதல்

திரு. தி. வேல்முருகன்: கடந்த 10 ஆம் தேதி, பாட்டாளி மக்கள் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளராக இருக்கிற திரு. வாசுதேவன் என்பவரை காவல் நிலையம் எதிரில், ...பந்தோப்பைச் சேர்ந்த ஒரு ரௌடிக் கும்பல், ஓட ஓட விரட்டி, வெட்டி அவரைக் கொலை செய்ய முயற்சித்தார்கள். உயிருக்கு ஆபத்தான நிலையில் பல இடங்களில் வெட்டுக் காயங்களுடன் காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்து அவரது உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. சம்பவம் நடந்தது 10 ஆம் தேதி. காவல் துறை ஆணையர், கூடுதல் ஆணையர், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளை நானும் எங்கள் கட்சியினுடைய முன்னாள் மத்திய

[திரு. தி. வேல்முருகன்] [2010 ஏப்ரல் 15

தொடர் வண்டித் துறை அமைச்சர் திரு. ஏ.கே. மூர்த்தி அவர்களும், சென்னை மண்டலக் குழுத் தலைவர் திரு. ஜெயராம் அவர்களும் தொடர்ந்து வலியுறுத்தியும் இதுநாள்வரையில் உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. ஆனால், அவருடைய உறவினர்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தபோது அரசியல் கட்சி ஒன்றின் பிரமுகர்கள் காவல் நிலையத்திற்குச் சென்று காவலர்களை மிரட்டி, விடுதலை செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதலமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். எங்கள் மாவட்டச் செயலாளரைக் கொலை செய்ய முயற்சித்த அந்த ரௌடிக் கும்பலைத் தேசிய பாதுகாப்பு சட்டத்தின்கீழோ அல்லது குண்டர் சட்டத்தின்கீழோ, உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைக்கு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர், அவை முன்னவர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உரிய நடவடிக்கைக்கு recommend செய்வோம். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, நீங்கள் கொடுத்திருக்கிற முன்னறிவிப்பை இப்போது எடுக்கப் போகிறேன். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பிரச்சினை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்களும் கொடுத்திருப்பதுதான் அது. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி.

(உ) வறட்சி, குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நிவாரண உதவி வழங்கக் கோருதல்

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை இது. தமிழ்நாட்டில் இப்போது கடுமையான வறட்சி நிலவுகிறது. (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கை குறித்து நான் பேசவில்லை. நான் சொல்லிவிடுகிறேன். கடுமையான வறட்சி நிலவுகிறது. அரசும் வறட்சியை ஒப்புக்கொண்டிருக்கிறது. வறட்சி நிலவுகிற மாவட்டங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காக நிதி ஒதுக்கியதற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன், வரவேற்கிறேன். அதேநேரத்தில், தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்கள், இன்றைக்கு